பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**18 01 2026** **7 15**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஒழுக்கம், கருணை, சகோரத்துவம், மனிதநேயம் போன்ற பண்புகள் இந்திய நாகரிகத்தின் ஆணிவேராக திகழ்கிறது என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. பிரதமர் திரு நரேந்திர மோடி அசாம் மாநிலத்தில் **6,950** கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

3. மத்திய அரசின் திட்டங்கள் அதிக எண்ணிக்கையிலான மக்களை சென்றடையும் வகையில் உரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் கூறியுள்ளார்.

4. உகாண்டா அதிபர் தேர்தலில் திரு. **Yoweri Museveni** மீண்டும் அந்நாட்டு அதிபராக தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.

5. ஸ்வீடன் ஓபன் பாட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Rujula Ramu இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஒழுக்கம், கருணை, சகோரத்துவம், மனிதநேயம் போன்ற பண்புகள் இந்திய நாகரிகத்தின் ஆணிவேராக திகழ்கிறது என்று குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், ராமாயணம் போன்ற இதிகாசங்கள் அறநெறியுடன் வாழ்வதற்கு வழிகாட்டிகளாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

தர்மத்தை ஒருபோதும் அழிக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

வால்மீகி, துளசிதாசர், கம்பர் எழுதியுள்ள ராமாயண காவியங்கள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

பகவான் ஸ்ரீ ராமரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்துகொள்ளும் சொற்பொழிவுகளைக் கேட்பதுடன், அன்றாட வாழ்வில் அவற்றை நாம் அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என்று திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி அசாம் மாநிலத்தில் **6,950** கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

**Nagaon** மாவட்டம் காஸிரங்கா வனப்பகுதியில் உயர்த்தப்பட்ட வழித்தடம் அமைப்பதன் மூலம் சாலைப் பாதுகாப்பை உறுதி செய்வதுடன் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்திற்கான கால அளவு வெகுவாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து **Kamakhya - Rohtak,** திப்ருகர் - கோமதி நகர் இடையே **2** புதிய அம்ரித் பாரத் விரைவு ரயில் சேவைகளையும் பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

பின்னர் **Kaliabor-**ல் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் பிரதமர் உரையாற்றுகிறார்.

முன்னதாக நேற்று கவுஹாத்தியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய பிரதமர், **BODO** அமைதி ஒப்பந்தம், ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வன்முறையையும் கைவிட்டு இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வகை செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

இம்மாநிலத்தைச் சேர்ந்த **Bodoland** பகுதி முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பொருளாதார வளர்ச்சி கண்டுள்ளதாக அவர் கூறினார்.

இம்மாநிலத்தின் வளர்ச்சிக்காக ஆயிரத்து **500** கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தியதை அவர் சுட்டிக்காட்டினார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, அம்மாநில மக்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்திற்கு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

<<<<>>>>

புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்று வரும் சர்வதேச புத்தக காட்சியை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பார்வையிட்டார்.

இந்த புத்தக காட்சியில் இடம்பெற்றுள்ள பல்வேறு அரங்குகளை பார்வையிட்ட அவர், பதிப்பாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்களுடன் கலந்துரையாடினார்.

இந்தப் புத்தக காட்சி இன்றுடன் நிறைவடைகிறது.

<<<<>>>>

மத்திய அரசின் திட்டங்கள் அதிக எண்ணிக்கையிலான மக்களை சென்றடையும் வகையில் உரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம், கோட்டயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

மத்திய அரசின் திட்டங்களை மாநில அரசு திறம்பட செயல்படுத்தவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

நிதி நெருக்கடியை சமாளிக்க அரசு எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்று அவர் தெரிவித்தார்.

மத்திய அரசால் வழங்கப்படும் நிதியைப் புறக்கணித்துவிட்டு கடன் பெறுவதிலேயே அம்மாநில அரசு அக்கறை செலுத்துவதாகவும் திரு. ஜார்ஜ் குரியன் கூறினார்.

<<<<>>>>

தமிழக வாக்காளர் பட்டியலில் இடம்பெற தகுதியுள்ள புதிய வாக்காளர்கள் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் இன்று நிறைவடைகிறது.

மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் டிசம்பர் மாதம் நிறைவடைந்து வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

இந்த வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத தகுதியுள்ள வாக்காளர்கள் மற்றும் புதிய வாக்காளர்கள் தங்களது பெயர்களை சேர்ப்பதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டது.

இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் 17ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் சந்தவ்லி மாவட்டத்தில் 6 ஒருங்கிணைந்த நீதிமன்றகள் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளுக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் நாட்டிற்கு சிறந்த முன்னுதாரணமாக திகழும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத், ஜனநாயக நடைமுறைகளுக்கு அதிகாரம்

அளிப்பதுபோல் நீதித்துறைக்கும் சம அளவில் அதிகாரம் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

மாவட்டம்தோறும் நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அவர், சந்தவ்லி, மஹோபா, அமேதி, ஷாம்லி, ஹத்ராஸ், ஔரையா ஆகிய பகுதிகளில் சோதனை அடிப்படையில் நீதிமன்றங்கள் கட்டப்பட உள்ளதாக திரு. யோகி ஆதித்யநாத் கூறினார்.

<<<<>>>>

ஆசியாவின் மிகப்பெரிய விமான கண்காட்சி **Wings India** ஹைதராபாதில் இம்மாதம் **28**ஆம் தேதி தொடங்குகிறது.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்த சர்வதேச கண்காட்சியை மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தொடங்கி வைக்கிறார்.

இது தொடர்பாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் விரைவான வளர்ச்சி கண்டு வரும் விமானப் போக்குவரத்து துறையின் செயல்பாடுகள் குறித்து இதில் காட்சிப்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான உற்பத்தியில் உலகின் மையமாக இந்தியாவை உருவெடுக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இந்த நிகழ்ச்சியில் விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விமான சாகசங்கள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

தில்லி, ஹரியானா, பஞ்சாப், பிஹார் ஆகிய மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கடும் பனிப்பொழிவு நிலவக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு-கஷ்மீர், லடாக், உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம், சிக்கிம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இதே நிலை நீடிக்கும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

கிழக்கு மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கட் மற்றும் ஒடிசாவில் குளிர்காற்று வீசக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் மத்திய பகுதிகளில் அடுத்த **2** நாட்களில் குறைந்தபட் வெப்பநிலை படிப்படியாக அதிகரிக்கும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

**உகாண்டா அதிபர் தேர்தலில் திரு. Yoweri Museveni மீண்டும் அந்நாட்டு அதிபராக தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.**

**அந்நாட்டு அதிபர் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு நேற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன.**

**இதில் தற்போதைய அதிபர் திரு. Yoweri Museveni, 71 புள்ளி ஆறு ஐந்து சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.**

<<<<>>>>

ஸ்வீடன் ஓபன் பாட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Rujula Ramu இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **21-17, 18-21, 21-11**, என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Audrey Chang**-ஐ வென்றார்.

-------------

இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இந்தூரில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சம நிலையில் உள்ளன.

--------------

19 வயத்துக்குட்பட்டோருக்குமான உலகக்கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி 18 ரன் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வென்றது.

Bulawayo-ல் மழை காரணமாக போட்டி தொடங்குவதில் ஏற்பட்ட தாமதத்தையடுத்து, 49 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

இதனையடுத்து, முதலில் பேட் செய்த இந்திய அணி 48 புள்ளி 4 ஓவரில் 238 ரன் எடுத்தது.

இந்நிலையில், மழை காரணமாக, டக்வொர்த் லூயிஸ் முறைப்படி போட்டி 29 ஓவர்களாக குறைக்கப்பட்டு, 165 ரன் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதனையடுத்து, களமிறங்கிய பங்களாதேஷ் அணி **28** புள்ளி **3** ஓவரில் **146** ரன் எடுத்தது.

-----------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், பெங்களூரு அணி **8** விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

நவிமும்பையில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் ஆடிய தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **166** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனையடுத்து, **167** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு ஆடிய பெங்களூரு அணி **18** புள்ளி **2** ஓவரில் **2** விக்கெட் இழப்புக்கு **169** ரன் எடுத்து வெற்றி பெற்றது.

**<<<<The End>>>>**